தமிழ்நாடு அரசு

# சுற்றுலாத்துறை

சென்னை - 600 002

நக.எண். 2228/மவமே2/2018 நாள். 11.05.2018

சுற்றுலாத்துறையில் காலியாக உள்ள 13 தோட்டக்காரர் பணியிடங்கள் மற்றும் 10 காவலர் பணியிடங்கள் இனச்சுழற்சி அடிப்படையில் நேரடி நியமனத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்டு நிரப்பப்பட உள்ளது.

| வ. எண் | பதவியின் பெயர்/ ஊதிய விபரம் | காலியாக உள்ள பணியிடங்களின் எண்ணிக்கை | காலியாக உள்ள இடங்களின் விபரம் | இனசுழற்சி முறை |
|---|---|---|---|---|
| 1 | தோட்டக்காரர்<br>ரூ.15700– 50000 வரிசை எண் 1 நிலை 1 | 13 | சுற்றுலா அலுவலகம், பூம்புகார் – 7<br>சுற்றுலா அலுவலகம், தூத்துக்குடி – 6 | பொதுப் பிரிவு<br>முன்னுரிமை –1<br>முன்னுரிமையற்றவர்–3<br>ஆதி திராவிடர் (அருந்ததியர்)<br>முன்னுரிமை –1<br>ஆதி திராவிடர்<br>முன்னுரிமை –1<br>முன்னுரிமையற்றவர்–1<br>மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்<br>முன்னுரிமை–1<br>முன்னுரிமையற்றவர்–2<br>பிற்படுத்தப்பட்டோர்<br>முன்னுரிமை–1<br>முன்னுரிமையற்றவர்–2 |
| 2 | காவலர்<br>ரூ.15700– 50000 வரிசை எண் 1 நிலை 1 | 10 | சுற்றுலா அலுவலகம், பூம்புகார் – 5<br>சுற்றுலா அலுவலகம், தூத்துக்குடி – 3<br>சுற்றுலா அலுவலகம், மதுரை –1<br>சுற்றுலா அலுவலகம், தஞ்சாவூர் – 1 | பொதுப் பிரிவு<br>முன்னுரிமை –1<br>முன்னுரிமையற்றவர்–2<br>ஆதி திராவிடர் (அருந்ததியர்)<br>முன்னுரிமை –1<br>ஆதி திராவிடர்<br>முன்னுரிமை –1<br>மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்<br>முன்னுரிமை–1<br>முன்னுரிமையற்றவர்–1<br>பிற்படுத்தப்பட்டோர்<br>முன்னுரிமை–1<br>முன்னுரிமையற்றவர்–2 |

**தகுதி: தோட்டக்காரர் பணியிடம்**

5–ஆம் வகுப்பு தேர்ச்சிப் பெற்றிருக்க வேண்டும்.
நல்ல உடல் தகுதி இருத்தல் வேண்டும்
தோட்டங்கள் பராமரிப்பதில் ஒரு வருடத்திற்கு குறையாமல் அனுபவம் பெற்றிருக்கவேண்டும் (உரிய அனுபவச் சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்)

**தகுதி: காவலர் பணியிடம்**

5–ஆம் வகுப்பு தேர்ச்சிப் பெற்றிருக்க வேண்டும்.
நல்ல உடல் தகுதி இருத்தல் வேண்டும்
கண்பார்வை தெளிவாக உள்ளது என சான்று (அரசு மருத்துவரிடமிருந்து பெற்று சமர்பிக்கப்பட வேண்டும்) முன்னாள் இராணுவ வீரர் **அல்லது** அரசு சார்ந்த நிறுவனத்தில் காவலராக இரண்டு வருட காலம் பணிபுரிந்த அனுபவம் பெற்றிருக்கவேண்டும் (உரிய அனுபவச்சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்).

**வயது வரம்பு:** (01–07–2017 அன்று)

| வ.எண் | பிரிவு | குறைந்த பட்ச வயதுவரம்பு | அதிகபட்ச வயது வரம்பு |
|---|---|---|---|
| 1 | பொதுப்பிரிவு | 18 | 30 |
| 2 | பிற்படுத்தப்பட்டோர் | 18 | 32 |
| 3 | மிகவும்பிற்படுத்தப்பட்டோர் | 18 | 32 |
| 4 | ஆதி திராவிடர் | 18 | 35 |

**முன்னாள் இராணுவத்தினர் வயது வரம்பு**

01.07.2017 அன்று ஐம்பத்து மூன்று வயதிற்குக் குறைந்த ஆதிதிராவிடர் வகுப்பினர், ஆதிதிராவிடர் வகுப்பினர் (அருந்ததியர்), பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், இசுலாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர் ஆகியோர். ஏனையோர் நாற்பத்தெட்டு வயதிற்குக் குறைந்தவர்கள்.

மாதிரி விண்ணப்படிவம் www.tamilnadutourism.org என்ற இணையதளத்திலிருந்து 28.05.2018 வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**நிபந்தனைகள்:**

1. தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பத்தினை கீழ்காணும் மாதிரி விண்ணப்பப் படிவத்தில் உள்ளவாறு வெள்ளைத்தாளில் தெளிவாக குறிப்பிட்டு எழுதி அனுப்ப வேண்டும்.
2. ஒவ்வொரு பதவிக்கு தனித்தனியே ஒரு விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும்.
3. கல்விச் சான்று நகல், சாதிச் சான்று நகல், அனுபவச் சான்று நகல், முகவரி சான்று மற்றும் பிறப்புச் சான்று நகல் ஆகியவற்றினை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
4. "விண்ணப்பங்கள் உரிய இணைப்புகளுடன் 28.05.2018 அன்று பிற்பகல் 5.45 மணிக்குள் சுற்றுலா ஆணையர், சுற்றுலா ஆணையரகம், தமிழ்நாடு சுற்றுலா வளாகம், எண்.2, வாலாஜா சாலை, சென்னை–600 002 என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தில் உள்ளவாறு விபரங்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத மற்றும் சான்றிதழ்கள் நகல்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.
5. தாமதமாக காலக்கெடுவிற்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
6. தகுதியில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
7. எந்த ஒரு விண்ணப்பத்தையும் எவ்வித காரணமும் கூறாமல் நிராகரிக்கும் அதிகாரம் நிர்வாகத்திற்கு உண்டு. மேலும், இப்பொருள் குறித்து எவ்வித மேல்முறையீடும் ஏற்கத்தக்கதல்ல.
8. விண்ணப்பதாரர்கள் கண்டிப்பாக இந்திய குடிமகனாக இருத்தல் வேண்டும்.
9. மேற்படி விளம்பரம் எவ்வித காரணங்களும் கூறப்படாமல் நிராகரிக்கும் அதிகாரம் சுற்றுலா ஆணையருக்கு உண்டு.

**சுற்றுலா ஆணையர்**

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

**காவலர் / தோட்டக்காரர் பணியிடத்திற்கான விண்ணப்படிவம்**

புகைப்படம்

| | | | |
|---|---|---|---|
| 1 | பெயர் | : | |
| 2 | பாலினம் | : | |
| 3 | தந்தை/கணவர்/பாதுகாவலர் பெயர் | : | |
| 4 | பிறந்த தேதி /வயது | : | |
| 5 | கல்வித்தகுதி / அனுபவச் சான்றிதழ் விபரம் | : | |
| 6 | முகவரி | : | |
| 7 | தொலைபேசி மற்றும் கைப்பேசி எண் | : | |
| 8 | மதம் | : | |
| 9 | வகுப்பு/இனம்/உட்பிரிவு | : | ஆதி/பழங்குடியினர்/ பிவ/மிபிவ/பொது |
| 10 | வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பின் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் முகவரி மற்றும் பதிவு எண் | : | |

**"விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் அனைத்தும் என் அறிவுக்கு எட்டியவரை உண்மை. தேர்விற்கு முன்போ அல்லது பிறகோ இவ்விபரங்கள் தவறு என அறியவரும் பட்சத்தில் என்மீது சுற்றுலா ஆணையர் அவர்கள் எடுக்கும் எவ்வித நடவடிக்கைக்கும் உட்படுகிறேன். மேலும் போட்டித் தேர்வுக்கு தேவையான அனைத்து தகுதிகளையும் பெற்றுள்ளேன் என உறுதி கூறுகிறேன்."**

இணைப்பு – 1) பிறப்புச் சான்று நகல்
2) சாதிச் சான்று நகல்
3) கல்வித் தகுதிச் சான்று நகல்
4) அனுபவச் சான்றிதழ் நகல்
5) முகவரி சான்றிதழ் நகல்

நாள் –
இடம் –

கையொப்பம்

செ.ம.தொ.இ/ 594 /வரைகலை/2018